தனிச்சுற்றுக்கு மட்டும்... விற்பனைக்கல்ல...

2026 March 1-15

அழகிய அரும்பு


# இன்று ✓

இன்று என்றும் நன்று

ஈ இதழ்




மார்ச் 8 மகளிர் தின வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன் சிறப்பிதழ்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

அனைவருக்கும் வணக்கம். சென்ற இதழில் காதல் கவிதைகளின் வண்ணமயமான எண்ணங்களை அனைவரும் ரசித்தனர். அது போல் இனி மாதத்தின் இரண்டாவது இதழ் ஏதோஒரு சிறப்பிதழாக வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வரிசையில் அடுத்த இதழ் சிரிப்பு ஸ்பெசலாக வெளியாகிறது. உங்கள் சிரிப்பு எண்ணங்களை சிறந்த படைப்பாக அனுப்பிவையுங்கள். ஜோக் சொல்கிறோம் என்று யாரையும் எடை குறைவாக மதிப்பிடுவதை தவிர்க்கவும். மற்றபடி ஜாலி தேர்தல், மன்னர் ஜோக், மருத்துவர் –மருத்துவ பயனாளி ஜோக், டாஸ்மாக் ஜோக் என்று கலாயுங்கள்.

அடுத்த ஏப்ரல் 1 இதழ் கோவைக்கவி புவனா அவர்களின் கைவண்ணத்தில் உருவாகிறது. அவர் அதற்கான பணிகளை தொடர்ந்து செய்துவருகிறார். அவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த இதழில் புகைப்படங்களைத் தொட்டால் அவர்களின் வாட்சப் சாட்–க்கு லிங்க் செல்லுமாறு அமைத்துள்ளோம்...

தொடர்ந்து எழுதுங்கள்... தொடர்ந்து வாசியுங்கள்...

நேசமுடன்

**வெ.கோபிநாத், ஆசிரியர்**
**குடந்தை பரிபூரணன், சிறப்பாசிரியர்.**

## March 2026

| Mon | Tue | Wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

ஏப்ரல் 2026
இன்று ஈ இதழ்
சிறப்பாசிரியர்
**கோவைக்கவி புவனா**



# மகளிர் தின ஸ்பெஷல்





குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

முத்து ஆனந்த்
வேலூர் 7010482479

வார்த்தைகளில் மட்டுமல்ல
அன்றாட வாழ்க்கையிலும்
சாதிப்பவர்கள் மங்கையர்!

சேலைச் சோலைகள் தான்
சுடிதார் சுந்தரிகள் தான் ஆனாலும்
இரும்பு மனுஷிகள் மாதர்!

உண்பது தெரியாமல்
உறங்குவது தெரியாமல்
உழைப்பவர்கள் பெண்கள்!

வெற்றியைத்
தொடும் வரை
ஓய்வதேயில்லை பெண்கள்!

வீட்டி(ல்)ன் கண்களாக
இருந்த பெண்கள்
இப்பொழுது நாட்டிற்கும் கண்கள்!

நம்பிக்கையின் தூண்கள்
மகளிர் மட்டுமே
அன்றும் இன்றும் என்றும்!

எந்தக் கவிதையிலும்
சொல்லி விட முடியாது
பெண்களின் அசாத்திய உழைப்பை!

மனசு பூ என்றாலும்
உறுதியில்
சுத்தியல் பெண்கள்!

மிகச் சரியாகப்
பொய் முகங்களைக்
கண்டுபிடிப்பவர்கள் பெண்கள்



லி.நௌஷாத் கான்
971561093550



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்



முரசு கொட்டி சொல்வேன்
உரசாமல்
உயிருக்குயிராய்
இன்னும்
ஏழேழு ஜென்மத்திற்கு கூட
அசராமல்
உன்னை காதலிப்பேனென்று!

---

உன் கண்களில்
காஜல் தானடி இட்டாய்
ஏனடி
என்னை தாக்கியது
ஒரு மின்னல்!!
போதும் நிறுத்து
உன் பார்வை யுத்தத்தை
விலகி கொள்கிறேன்
உன் காதல்
விளையாட்டிலிருந்து!!

---

உனக்கு கொடுக்க வேண்டிய
ரோஜாப்பூ
இன்னும் கொடுக்கப்படாமலே
என் இதயக்கதவுகளில்
சிக்கித் தவிக்கிறது

எனக்கு
எப்போதுமே
நீ மட்டுமே ஸ்பெஷல்
என் பலவீனங்களையும்
பலமாய் அறிந்தவள்
நீ மட்டும் தானடி!!

ஒரு பேச்சுக்கு தான்
சொன்னேன்
உண்மையாகவே
மாறி விடாதே?
ஒரு காதல் பிசாசாய்!!

அழகான ஒரு மானை
ஈர்க்க வந்த காளை
மீட்ட வந்தேன் வீணை
மனசு மாறியது
மதில் மேல் பூனை
கடமை தடுத்தும்
போட முடியவில்லை அணை
இதுதான்
சதி செய்யும் காலத்தின்
விதி போட்ட கணக்கின்
காதலின் வினை!!

# விளம்பர விபரம்

அன்பார்ந்த வாடிக்கையாளரே...
இன்று ஈ இதழ் கடந்த ஓராண்டாக எந்த விளம்பரமும் இல்லாமல் பல்வேறு வாட்சப் குழுக்கள் வழியாக தமிழகம் முழுவதும் மற்றும் கடல் கடந்தும் 10,000 த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு செல்கிறது.

இன்று ஈ இதழில் விளம்பரம் செய்தால் www.indhru.in என்ற இணையத்திலும் இலவசமாக விளம்பரம் பதிவேற்றம் செய்யப்படும். உங்களுக்கு இது கூடுதல் நன்மையைத் தரும்...

இந்த குறைந்தகால சலுகையை பெற்று பயனடையுமாறு அன்புடன் அழைக்கிறோம்... இதழ் வேண்டுமா? கீழே உள்ள படத்தைத் தொடவும். இன்று ஈ இதழ் படிக்கலாம்.

ஒரு பக்க விளம்பரம் ரூ.~~10,000~~
சலுகை விலையில் **ரூ.5,000** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.208/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.
இத்துடன் ஒரு ஆண்டு முழுவதும் www.indhru.in இணையத்திலும் விளம்பரம் இலவசமாக வெளியாகும்.

அரை பக்க விளம்பரம் ரூ.~~5,000~~
சலுகை விலையில் **ரூ.2,500** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.104/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.
இத்துடன் ஒரு ஆண்டு முழுவதும் www.indhru.in இணையத்திலும் விளம்பரம் இலவசமாக வெளியாகும்.

கால் பக்க விளம்பரம் ரூ.~~2,500~~
சலுகை விலையில் **ரூ.1,250** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.52/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.

மேலும் விபரங்களுக்கு 7094053241 என்ற எண்ணுக்கு வாட்சப்பில் தொடர்புகொள்ளவும். அல்லது அருகிலுள்ள படத்தைத் தொடவும்

# குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

தற்காலத் தமிழ் இலக்கிய உலகில் 'குடந்தை பரிபூரணன்' என்னும் பெயர், ஆழமான சிந்தனைக்கும் தனித்துவமான மொழிநடைக்கும் சான்றாகத் திகழ்கிறது. கும்பகோணத்தின் செழுமையான மண்ணின் மைந்தராக, அதன் பண்பாட்டு விழுமியங்களைத் தனது எழுத்தில் அவர் பிரதிபலிக்கும். அவரது பெயருக்கேற்ப, அவரது படைப்புகள் கருப்பொருளிலும், சொல்ல வந்த செய்தியிலும் ஒரு முழுமையைக் (பரிபூரணம்) கொண்டுள்ளன.

வெறும் கற்பனைகளை மட்டும் எழுதாமல், சமூக அவலங்களைச் சுட்டிக்காட்டும் அறச்சீற்றம் அவரது வரிகளில் மிளிர்கிறது. பெண்ணுரிமை மற்றும் அவர்களின் மன உணர்வுகளை மென்மையாகவும் அதே சமயம் அழுத்தமாகவும் பதிவு செய்யும் பக்குவம் அவரிடம் உண்டு. எளிய சொற்களைக் கொண்டு அரிய கருத்துக்களைச் சொல்வதில் அவர் ஒரு தத்துவவாதியாகப் பரிணமிக்கிறார்.



வாசகர்களைத் தனது கதையின் ஒரு அங்கமாகவே உணரச் செய்யும் ஆளுமைத் திறன் அவரிடம் உள்ளது. நகைச்சுவை, சோகம், ஆச்சரியம் என நவரசங்களையும் சம அளவில் கையாளும் வித்தையை அவர் கைதேர்ந்தவர்.

பரபரப்பிற்காக எழுதாமல், இலக்கியத் தரத்திற்காக மட்டுமே எழுதும் அவரது நேர்மை போற்றுதலுக்குரியது.

வாழ்வின் நிலையற்ற தன்மையை எளிய மனிதர்களின் உரையாடல்கள் வழி உணர்த்தும் விதம் தனிச்சிறப்பு.

தேவையற்ற வர்ணனைகளைத் தவிர்த்து, சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகவும் ஆழமாகவும் சொல்லும் பாணி அவரது சிறப்பு.

தற்கால இளைஞர்களுக்குத் தமிழ் மொழியின் நுட்பங்களைச் சொல்லிக் கொடுக்கும் ஆசானாக அவர் திகழ்கிறார்.

கலாச்சாரச் சிதைவுகளைத் தடுத்து நிறுத்தத் தனது பேனாவை ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்.

தமிழ் மொழியின் மீது அவர் கொண்டுள்ள மாறாத பற்று, ஒவ்வொரு வரியிலும் தேனாக இனிக்கிறது. விமர்சனங்களைத் அவரது எழுத்துக்கள் எவ்வித எதிர்மறை விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டு, மக்களின் மனதை நேரடியாகச் சென்றடைகின்றன.

மொத்தத்தில், குடந்தை பரிபூரணன் அவர்கள் தமிழ் இலக்கிய உலகின் மணிமகுடத்தில் பதிக்கப்பட்ட ஒரு விலைமதிப்பற்ற வைரம்.

அவரது எழுத்துப் பணி இன்னும் பல சிகரங்களைத் தொட வேண்டும் என்பதே இலக்கிய ஆர்வலர்களின் விருப்பம்.

**பி.சி.ராகு.**
✆6369250307
**இயக்குனர், விழுப்புரம்**

குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## குடந்தை தந்த எழுத்துச் சுடர்!



"எழுத்து என்பது ஒரு கலை என்றால், அதில் 'துணுக்கு எழுத்து' என்பது ஒரு நுண்கலை. அந்த நுண்கலையில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்து வருபவர் நண்பர் குடந்தை பரிபூரணன். சமகால நிகழ்வுகளைத் தன் கூர்மையான பார்வையால் கவனித்து, அதை ரத்தினச் சுருக்கமாகச் சொல்லும் இவரது திறன் வியக்கத்தக்கது. 'இன்று' மார்ச் இதழை அலங்கரிக்கும் இவரது எழுத்தோவியங்கள்,வாசகர்களுக்கு ஒரு புதுவிதமான வாசிப்பு அனுபவத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை."
பரிபூரணன் அவர்களை வாழ்த்துவதில் இன்று நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

**ரமேஷ்பாபு.**



மார்ச்சில்
'இன்று'
பரிபூரணம்
பெறுகிறதோ
பரிபூரணன்
திருக்கரத்தால்...!

இனி
'இன்று'
என்றும்
பரிபூரணமாக
தக தகக்குமோ
பரிபூரணன்
பங்கேற்றதால்...!

'இன்று'க்கு
இனி
மாதந்தோறும்
பொங்கல் தான்...
பக்ரீத் தான்...
ரம்ஜான் தான்...!

வாழிய
'இன்று'
இன்றும்,
என்றும்...

---

அன்புடன்,
புதூர் பாலா.
85250 82821

# பரிசுப் பொருட்கள்



வருடம் முழுவதும் உங்கள் விளம்பரம்
கண்ணில் பட்டுக்கொண்டே இருக்கும்.
காலண்டர் தருவதை விட இது சிறந்தது...




வாடிக்கையாளர்களுக்கு
பரிசளிக்க
ஏற்றது...











மொய் கவர்கள்
ஒட்டும்
வசதியுடன் உள்ளது

உங்கள்
பெயரில்
செய்யலாம்.

கண்ணில்
பட்டுக்கொண்டே
இருக்கும்
விளம்பரம்...

குறைந்தபட்சம்
பத்து
எண்ணிக்கையில்
செய்யலாம்

இன்று
வெப்சைட்க்கு
க்ளிக் செய்யவும்

கீ செயின் ஹேங்கர் வீடியோ பார்க்க
கீழே உள்ள படத்தை தொடவும்...

இன்று
வாட்சப்-க்கு
க்ளிக் செய்யவும்

குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## நூறாண்டு காலம் வாழ்க!!

**********

ச.பாக்கியசாமி எனும் இயற்பெயருடைய திரு குடந்தை பரிபூரணன் அவர்கள் அகவை எண்பது கடந்தும் எழுத்துப் பணியில் அயராமல் உழைத்து வரும் தேனீ.

இவருடைய எழுத்துக்கள் பலருக்கு இருந்திருக்கின்றன ஏணியாகவும் தோணியாகவும்.



தேசப்பற்று, சமூக விழிப்புணர்வு இவைகளை கருப்பொருளாகக் கொண்ட கவிதைகள் புனைவதில் தேர்ச்சி பெற்றவர். மரபுக் கவிதைகளின் மன்னர்.

சிறப்பான சிறுகதைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர்.

எழுத்துலகில் பரிசுகளையும் விருதுகளையும் வாரிக்குவித்து வருகிறார்.

இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு ஈடு கொடுத்து எழுதி வரும் இவரது திறமை அளப்பரியது.

குடந்தை பரிபூரணன் அவர்கள் நூறாண்டுகள் கடந்தும் நலமுடன் வாழ்ந்து, இலக்கியப் பணியாற்ற இறைவனை இறைஞ்சுகிறேன்.

- ரிஷிவந்தியா,தஞ்சாவூர்.



ø அறிவிப்பு

முகமறியாத,
ஒருபோதும் சந்திக்காதவர்கள்
வாசித்த விவரத்தையும்,
எங்கோ யாரோ
வார்த்தைகளுடன் தனது நேரத்தை
செலவிட்ட விவரத்தையும்
அளவிட முடியாத மகிழ்ச்சியுடன்
அறிவிக்கிறது
காசோலையுடன் வந்த
ராயல்டி பட்டியல்

ஸ்ரீநிவாஸ் பிரபு

குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## " இலக்கியம் பெற்ற பாக்கியம்...!"

தஞ்சாவூர் மாவட்டம் குடந்தை வட்டம் வடகரை எனும் சிற்றூரில் எளிமையாக வாழ்ந்து வரும் பாக்கியசாமி என்கிற குடந்தை பரிபூரணன் அவர்கள் எண்பது வயதைக்கடந்த முதுபெரும் இலக்கியவாதி.தமிழ் இலக்கியத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும்; எண்ணற்ற கவிதைகள் ; துணுக்குகள்; கட்டுரைகள் 'என தமிழகத்தில் வெளியாகும் இதழ்களில் படைத்துள்ளார்.இவருடைய எழுத்துகள் பெரும்பாலும் விளிம்பு நிலை மாந்தர்களின் வாழ்வியல் போராட்டங்களை மையப்படுத்தியே இருக்கும்.

2024-ஆம் ஆண்டு தனது முதல் சிறுகதை தொகுப்பான ' எடுக்கவோ கோர்க்கவோ..' நூலை வெளியிட்டுள்ளார். தற்போது ' ஒரு தாய் மக்கள்' சிறுகதை தொகுப்பு அச்சில் இருப்பதாக தெரிவித்தார்.



சிறந்த இலக்கியச்சொற்பொழிவாளரான குடந்தை பரிபூரணன் காரை- திருச்சி பண்பலை வானொலியில் உரையாற்றி உள்ளார். வானதி சிறுகதை விருது; புதுச்சேரி படைப்பாளர் விருது; விகடகவி படைப்பாளர் விருதுகளையும்; பல்வேறு பரிசுகளையும் பெற்றுள்ள இவர்..தமிழ்நாடு அரசு வழங்கும்'அகவை முதிர்ந்த தமிழறிஞர்' விருதையும் 2024-ல் பெற்றுள்ளார்.தனது வயது முதிர்வை பொருட்படுத்தாமல் இன்றும் இலக்கியத்தேடலில் ஆர்வம் கொண்டுள்ள எழுத்தாளர்..தமிழறிஞர்..குடந்தை பரிபூரணன் அவர்களை நாமும் பாராட்டி மகிழ்வோம்...!!

**கவிஞர் .இல.இரவி**
**செ.புதூர்..612203**
**அ.பேசி : 9952113194**



இயற்கை
இயற்கையோடு
கவிதையாய்
வருவதைப் பார்த்து
என் மனமோ
இயற்கை எய்துகிறது
அவளது பேரழகில்...

பாரதி முத்து

# குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## தமிழகன் வாழ்த்துரை

இலங்கை மலையகத்தின் எழில் கொஞ்சும் பதுளையிலிருந்து தாயகம் திரும்பி தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கும்பகோணம் அருகே வளைந்து நெளிந்து செல்லும் சாலையும் பசும் வயல்வெளியுமாய் அழகு கொஞ்சம் வடகரையில் வாழும் மூத்த எழுத்தாளர் அன்புக்குரிய குடந்தை பரிபூரணன் அவர்களை 1986 இல் சந்தித்தேன். அறிமுகமானேன். சிறந்த இலக்கிய படைப்பாளி யாக இருந்தாலும் தமிழகம் இவருக்கு உரிய அங்கீகாரத்தை அளிக்கவில்லை என்பது என் மனவேதனை.

"இன்று" என்னும் இந்த மின்னிதழ் நண்பர் குடந்தை பரிபூரணனுக்கு உரிய அங்கீகாரம் வழங்க முன்வந்திருப்பது பாராட்டிற் குரியது.



தற்போது வெளிவரும் "ஒரு தாய் மக்கள்" எனும் சிறுகதைத் தொகுப்பு இவருக்கு இலக்கிய மகுடம் சூட்டும் என்பது உறுதி.

தாயகம் திரும்பியவர்களில் முகிழ்த்து வந்த மூத்தப் படைப்பாளியான அன்புக்குரிய நண்பர் குடந்தை பரிபூரணன் அவர்களின் அற்புதமான மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பு "எடுக்கவோ கோர்க்கவோ" என்பதாகும். சிறந்த கருத்துகளின் கருவூலமாக திகழும் இந்த நூல்கள் போற்றப்படவேண்டும்.

இன்னும் பல இலக்கியப் படைப்புகளை படைத்து தமிழ்த்தாய்க்கு மகுடம் சூட்ட வேண்டும் என்ற பேரவாவுடன் குடந்தை பரிபூரணன் அவர்களை இன்று மின்னிதழ் சார்பாக நெஞ்சார வாழ்த்துகிறேன்.


தோழமையுடன்..
வழக்கறிஞர் தமிழகன். MA.B.L
ஆசிரியர், தமிழக்காவிரி,
திருச்சிராப்பள்ளி

## குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

2016– ஆம் ஆண்டு ' வானதி ' மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்ட எனக்கு, நான் எழுதியிருந்த சிறுகதையும் பரிசுக்குரியதாகத் தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருது வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது.
அந்த விழாவில் இதே சிறுகதைப் போட்டியில் பங்கேற்று பரிசு பெறுவதற்கு வந்திருந்த எழுத்தாளர் திரு. குடந்தை பரிபூரணன் அவர்களை முதன்முதலாக சந்தித்தேன். இருவரும் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொண்டோம்.
அவர் நான் வசிக்கும் மயிலாடுதுறைக்கு அருகேயுள்ள ஆடுதுறை என்னும் ஊர் அருகே ஒரு சிற்றூரில் வசிக்கிறார் என்பதையும் அறிந்து கொண்டேன்.
இனிமையாக பழகியதன் விளைவு இருவரும் இன்றுவரை நல்ல நண்பர்களாக இருந்து வருகிறோம்.



தமிழ்நாட்டிலுள்ள பிரபல வார மாத இதழ்களில் கதை, கவிதை, கட்டுரை என தொடர்ந்து எழுதி வரும் அவரது படைப்புகள் பெரும்பாலும் மலையகம் சார்ந்த கதைகளாகவே இருக்கும்.
குடந்தை பரிபூரணன் அவர்களது இயற்பெயர் ச. பாக்கியசாமி என்பதாகும். தனது அன்னையின் மேலுள்ள அளப்பரிய அன்பால் அவரது பெயரையே புனைப் பெயராக்கிக் கொண்டு (குடந்தை பரிபூரணன்) தனது ஆக்கங்களை படைத்து வருகிறார்.
தமிழில் தொடர்ந்து வெளிவரும் பொதிகைச் சாரல், இலக்கியப்பீடம், கதைசொல்லி, ஆகிய இதழ்களில் சிறுகதைகள் எழுதி பரிசுகளும் பல பெற்றுள்ளார்.
தமிழ்நாடு அரசு இவரை தமிழறிஞராக தேர்வு செய்து மாதாந்திர உதவித்தொகையும் இவருக்கு வழங்கி வருகிறது.
அன்பும், பண்புமிக்க எழுத்தாளர் குடந்தை பரிபூரணன் அவர்களோடு நான் கொண்டிருக்கும் தோழமை எனக்கு பலவிதங்களில் உதவிகரமாக இன்றளவும் இருந்து வருகிறது.
நாங்கள் இருவரும் கைபேசி மூலமாகவும் புலனம் வழியாகவும் நாளும் தொடர்பில் இருந்து வருகிறோம்.
இவர் தனது சொந்த முயற்சியில் " எடுக்கவோ, கோர்க்கவோ" என்ற சிறுகதை நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.
மலையகத்தின் பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் உடன்பிறந்த சகோதரர் எழுத்தாளர் குடந்தை பரிபூரணன் என்பது மிகவும் பெருமைக்குரிய தாகும்.

**அன்புடன்...**
**நன்னிலம் இளங்கோவன்.**

## குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

குடந்தை பரிபூரணன் கும்பகோணத்தைச் சேர்ந்தவர் எழுத்தாளர் மற்றும் கவிஞர் ஆவார், இவர் தினமணி, மற்றும் பல இதழ்களில் கவிதைகள் மற்றும் கட்டுரைகளை எழுதியுள்ளார். கவிதை, இலக்கியச் சிந்தனைகள் மற்றும் வாசகர் கடிதங்கள் மூலம் இலக்கிய உலகில் அறியப்படுகிறார்.
முக்கிய அம்சங்கள்:
படைப்புகள்: கவிதைகள் (எ.கா., 'பாலென காதல் பொங்கும்') மற்றும் இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரின் இலக்கிய ஆர்வமும் எழுத்து பணியும் சிறப்பாக உள்ளன



**கே.அசோகன் சென்னை**

கிட்ட தட்ட முப்பது ஆண்டுகளாக இலக்கிய உலகில் பயணித்து வரும் திரு குடந்தை பரிபூரணன் காட்சிக்கு எளிமையானவர் கடும் சொல் பேசாதவர் . அவரது படைப்புகள் ஒவ்வொன்றும் எளிய மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் உணர்வுகள்.
கவிதை,கட்டுரை,கதை என்று எல்லா இலக்கியங்களும் அவர் தன் திறமையைக் காட்டுபவர்.



**அனந்த் சீனிவாசன்**
**சென்னை 89.**

### டிப்ஸ்

1. தீ காயம் ஏற்பட்டால் அந்த இடத்தில் வெந்தயத்தை அரைத்து பொடி செய்து அதை தீக்காயத்தின் மேல் தடவினால் தீக்காயம் குணமாகும்

2. அடிக்கடி வெண்டைக்காய் சாப்பிட்டால் கண்களுக்கு குளிர்ச்சி கிடைக்கும்

3. காலையில் ஒரு பூண்டு பல் சாப்பிட்டால் ரத்த ஓட்டம் விருத்தி அடையும் அடைப்புகள் நீங்கும்

4. பாலுடன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் வெப்ப நோய்கள் குறையும்

5. உடல் மெலிந்த குழந்தைகளுக்கு முருங்கைப்பூ பால் கொடுத்து வந்தால் குழந்தை புஷ்டியாக இருக்கும்



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

# குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்


குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

குடந்தை பரிபூ ரணன்: திரு குடந்தை பரிபூரணன் ஐயா அவர்கள் தோற்றத்திற்கு எளியவர். ஆனால் அவரது எழுத்தாற்றல் அளப்பரியது. நீண்ட காலமாக பத்திரிகைகளில் எழுதி வருபவர் என்பது அனைவரும் அறிந்ததே! மரபுக் கவிதைக்கான இலக்கணமே தெரியாத என்னைப் போன்ற இளம் தலைமுறையினருக்கு அவரது மரபுக் கவிதைகள் மிகவும் ஆச்சரியமளிக்கிறது. அவர் கவிதை, ஜோக்ஸ், சிறுகதைகள் என்று எல்லாவற்றிலும் கால் பதித்திருக்கிறார் என்றாலும், அவரது மரபுக் கவிதைகளுக்கு நான் ரசிகன். அவற்றைப் படிக்கும்போது இதுபோல் நம்மால் எழுத முடியவில்லையே என்ற ஏக்கம் ஏற்படும். அவை வெறும் வார்த்தை அலங்காரமாக இல்லாமல் மிகவும் பொருள் பொதிந்தவையாகவும் நம்மை வசீகரிக்கக் கூடிய வகையிலும் அமைந்திருப்பது வெகு சிறப்பு! வயதைக் காரணம் காட்டி எழுத்தில் சுணக்கம் காட்டாதிருப்பது, எழுத்தின் மீதும் இலக்கியத்தின் மீதும் அவருக்கு இருக்கும் தீராப் பெருங்காதலை நமக்கு உணர்த்துகிறது. ஐயாவுக்கு நான் வாழ்த்துரை எழுதுவது என்பது என் வாழ்வின் பாக்கியம். இன்னும் அவர் நீண்ட காலம் நலமோடு வாழ்ந்து இலக்கிய சேவை ஆற்ற இறைவனை வேண்டுகிறேன்!



திரு. பரிபூரணன் அவர்கள் தனது பெயருடன் குடந்தையை இணைத்து, "குடந்தை பரிபூரணன்" என்று வைத்திருக்கிறார்! குடந்தை பல கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இருப்பினும் இவர் பிறந்தது, இலங்கை மலையத்தில்!

அவர் இன்னும் பல சிறந்த இலக்கியப் படைப்புகளை அளிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்

நிஜாமுதீன், நீடூர்.

# குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை
பரிபூரணன்

மனிதநேயம் மிக்க எளிமையான நண்பர்.

ஆடுதுறை கிரசண்ட் மே.நி.பள்ளி கலைநிகழ்ச்சி ஒன்றில் தான் பரிபூரணன் அவர்களை முதன்முதலாக நான் சந்தித்தேன். உடற்கல்வி ஆசிரியர் ஷண்முகம் அவர்கள், "இவர் என் நண்பர். சிறந்த எழுத்தாளர் கவிஞர் காரைக்கால் வானொலியில் சிறுகதைகள் கட்டுரைகள் என்று நிறைய பங்களிப்பு செய்திருக்கிறார்" என்று அறிமுகஞ் செய்து வைத்தார். அதன்பிறகு நாங்கள் இருவரும் நெடுநேரம் உரையாடிக் கொண்டிருந்தோம். நெடுநாள் பழகியவரைப் போல மிகவும் அன்புடன், நேசத்துடன் பேசிக்கொண்டிருந்தார். தமிழ்நாடு மின்னிதழில் வெளியான அவரது கவிதைகள், ஒரு பக்கக் கதைகள் என்று கைப்பேசியில் சேமித்து வைத்திருந்த பதிவுகளை நிறைய காண்பித்தார். பொழுது போக்கு அம்சமாக இல்லாமல் நல்ல நல்ல கருத்துகள் அதில் மிளிர்ந்ததை காணமுடிந்தது. மாணவர்களுக்கு சிறந்த கருத்துகளைக் கூறும் "மாத்திரை" "தவறு தந்த பாடம்" போன்றவை வித்தியாசமான சிந்தனைகளைக் கொண்டிருந்தன. சிறுவர்களுக்கான பாடலில் ஐந்து விரல்கள் ஒவ்வொன்றின் சிறப்பைப் பற்றியும் அரிய செய்திகளை எளிய முறையில் எழுதியிருந்தார்.

"எடுக்கவோ கோர்க்கவோ" என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும் என்னிடம் வழங்கினார். நல்ல கருத்து செறிவு மிக்க கதைகள் அந்தத் தொகுப்பில் காணப்பட்டன. நான் தொல்லியல் துறையில் ஆய்வு மாணவனாகவும் இருக்கிறேன். அது தொடர்பான பல அரிய செய்திகள் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டார். வாட்ஸ் அப்பில் நிறைய பதிவுகளை அவ்வப்போது அனுப்பிக் கொண்டிருப்பார். அவருடைய காலை வணக்கத்தில் நான் கண்விழித்த நாட்கள் கணக்கற்றவை. நல்ல மேற்கோள்களுடன் கூடிய பதிவுகள் அவை. மிகவும் எளிமையாக, வயது வித்தியாசம் இன்றி ஒரு இளைஞரைப் போல நட்புடன் பழகினார். அவரைப் பற்றி எழுத "இன்று" மின்னிதழில் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது எனக்கு மிகுந்த மகிழ்வைத் தருகிறது. நண்பர் என்றும் ஆரோக்யத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்துகிறேன்.



உங்கள் அனுபவங்களும் வழிகாட்டுதலும் எங்களுக்கு என்றும் மகிழ்வையே தருகின்றன. அன்பும் மனிதநேயமும் பற்றி அவரிடமிருந்து தான் கற்றுக் கொள்ள வேண்டும் என்றே கூறலாம். பரிபூரணன் அவர்கள் நலமுடன் நீடூழி வாழ வாழ்த்துகிறேன் .

**பஸீர் அகமது.**
**கிரசண்ட் மே.நி.பள்ளி. ஆடுதுறை.**

## குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்

எழுதுவதற்கு வயது ஒரு தடையல்ல!

எங்கள் தமிழக எழுத்தாளர் குழுமம் இருநூறுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டது. இந்த குழுமத்தில் யாரும் சலைத்தவரல்ல. ஒருவர் ஜோக் படைப்பதில் வல்லவராக இருந்து, இன்று சிறுகதை, நாவல் என எல்லா வகையான படைப்புகளிலும் சிறந்து விளங்குகிறார் என்றால், இங்கு அடிக்கடி நடத்தப்படும் விதவிதமான இலக்கியப் போட்டிகளும், குழுமத்தை திறம்பட நடத்தும் அட்மின்களுமே காரணம்.

இங்குள்ள எழுத்துலக ஜாம்பவான்கள் மத்தியில் என்னை மிகவும் கவர்ந்தவர்களில் ஒருவர் திரு. பாக்கியசாமி என்கிற குடந்தை பரிபூரணன்!

அகவை எண்பதை நெருங்கிக் கொண்டிருக்கும் இவர் எழுதுவதற்கு வயது தடையல்ல என்பதற்கு உதாரணம்! இவரின் இலக்கிய புலமை என்னை வியக்க வைத்துள்ளது. இலக்கணத்தில் எனக்கு எழும் சந்தேகங்களை போக்கும் 'என்சைக்ளோபீடியா' அவர். அது அவரின் அகந்தையை எள்ளளவும் அதிகரிக்காதது இவரின் தன்னடக்கத்தை காட்டுகிறது!



குழந்தையுள்ளம் படைத்த இவரின் படைப்புகளில் எதைச் சொல்லி புகழ்வதென்பது முடியாததொன்று! மேற்கோள் காட்ட அவரின் அனைத்து நூல்களுமே சாட்சி!

"பொதிகைச்சாரல்" சிறுகதைப் போட்டியில் வென்று, என் மனதையும் வென்று விட்ட அவரை கவுரவிக்கும் விதமாக, "இன்று " மார்ச் இதழின் தொகுப்பாசிரியர் தேர்வு மிகச் சரியான தேர்வு!

அவரின் இலக்கிய சேவை தொடர நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

அன்புடன்,

**மூ. மோகன், வேலூர்**

அலைபேசி:9042111747

## குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

ஈழுத்து மலையகத்தின், பதுளை நகரிலுள்ள "புனித பீட்ஸ்" பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்தே இவரை நான் நன்கு அறிவேன். நானும் அதே பதுளையிலுள்ள "தர்மதூத்தா" பள்ளியில் (1957 வாக்கில்) படித்துக்கொண்டிருந்த போது ஒரே பேருந்தில் காலையில் சென்று மாலையில் வருவோம். அப்போது அவர் பாக்கியசாமி என்ற மாணவர்.

அட்வான்ஸ் லெவலோடு கல்வியை முடித்துக் கொண்ட அவர் ஆசிரியர் பணியில் அமர்ந்தபோது நான் கல்வியைத் தொடர பேராதனை பல்கலைக்கழகத்துக்கு சென்றேன். எழுத்துலகில் அடி எடுத்து வைத்தபோது அவர் "பரிபூரணன்" என்ற புனைப் பெயரை தனதாக்கிக்கொண்டார். தாய்ப் பாசம் மிகுந்த அவர் தாயின் பெயராகிய பரிபூரணம் என்பதையே புனைப்பெய ராக்கிக் கொண்டார். தமிழகம் சென்று கும்பகோணம் அருகில் வசிப்பதால் "குடந்தை பரிபூரணன்" என்று தன்னை நிலை நிறுத்திக் கொண்டார்.
மலையகத்தின் இளம்எழுத் தாளர் அணியில் பூத்த பரிபூரணன் ஒரு ஐம்பது ஆண்டுகால எழுத்து வாழ்வை வரிதாக்கிக் கொண்டிருக்கிறார்.

முன்பின் அறியாத தேசத்தில் கால் பதித்து, தொழில் தேடி, குடும்ப வாழ்கைச் சுழலில் மோதுண்ட போதும், தன் எழுத்து வாழ்வை அவர் தொலைத்து விட வில்லை. தமிழக மண்ணில் புலம்பெயர்ந்த வாழ்க்கைச் சூழ்நிலையிலும், கணையாழி, தளம், இலக்கியப்பீடம், பொதிகைச் சாரல், கதைசொல்லி, வானதி, தளம் போன்ற தமிழக இதழ்களில் சிறுகதைகள் படைத்து, பரிசும் பாராட்டுகளும் பெற்றிருப்பது, பரிபூரணனின் எழுத்து வளத்துக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. கதை மாந்தர்களில் ஒருவராக அவர் தன்னையும் நிலைநிறுத்திக் கொள்ளும் தன்மை, அவரது கதைகளுக்கு தனிப் பலம் சேர்க்கிறது.
கதைகளில் அழகிய உவமைகளை குவிப்பதிலும், கவித்துமான நடைகளிலும் பரிபூரணனிடத்தில் ஒரு கவிஞன் மிளிர்வதைக் காணமுடிகிறது. அவர் மரபுக் கவிதைகள் அங்கும் இங்கும் நிறைய படைத்திருக்கிறார்.

இலைமறை காயாக இருந்து, இயல்பாக எழுதிக் கொண்டிருக்கும் பரிபூரணன் மேலும் பல எழுத்தோவியங்களைப் படைத்து "இன்று" சிறப்பித்ததைப்போல என்றும் புகழ்பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

பொருளியல் பேராசிரியர்.
**மு.நித்தியானந்தன்.**
லண்டன்.

## குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

இன்று ஈ இதழ் சிறப்பாசிரியராக களம் கண்டிருக்கும் திரு. குடந்தை பரிபூரணன் அவர்களை மனதார வாழ்த்துகிறேன்.



திரு. பரிபூரணன் அவர்கள் தமிழக எழுத்தாளர்கள் குழுமத்தின் நீண்ட நாள் உறுப்பினர். நேர்மையும், கண்ணியமும் மிக்கவர். அவரால் குழுவில் யாதொரு சலசலப்பும் வந்தது கிடையாது. சிறந்த படைப்பாளராகவும் வலம் வருகிறார். அவர் மென்மேலும் வளர்ந்து, பல்வேறு சாதனைகள் புரிய குழுமத்தின் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெ.பாண்டியன்,
அட்மின்–தமிழக எழுத்தாளர் குழு.

## மகளிர் தின ஸ்பெஷல்



இறைவியானவள்

கரு விதையை
விருட்சமாக்கும்
மாபெரும் சக்தியவள்!
கருணையே உருவான
உயர்வின்
அடையாளமவள்!
கவிதையாகிக்
காதலின் அர்த்தம்
மொழிபவள்!
கணவனின் கரங்களில்
அடைக்கலம் புகுபவள்!
தன்னவர்களுக்குத்
துன்பமெனில்
ஆதி சக்தியின் அவதாரமவள்!
ஒப்பற்ற ஒப்பிடவியலாப்
பேரன்பின்
இலக்கணமவள்!



கோவைக்கவி புவனா
கோயமுத்தூர்.

# குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்


குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

இனிய எழுத்தாளருக்கு வணக்கத்துடன்....

*அன்பும் ஆற்றலும் நிறைந்தவர் குடந்தை பரிபூரணன் ஐயா அவர்கள்,

இவருடைய தனித்தமிழில் இவர் ஒரு 'குட்டியாக வாழ்த்தினாலும்' கூட அது எனக்கு 'மணி மகுடம்' சூட்டினாற் போல...!

மனம் நெகிழும் வண்ணம் சிறுகதைகள் எழுதுவதில் வல்லவரான இவருடைய கவிதைகள் மனதைக் கொள்ளையடிக்கும்! இவருடைய கவிதைகளும் வாழ்த்துகளும் தனியான இலங்கைத் தமிழால் என் மனதை மிகவும் மயக்கும்!

குடந்தை பரிபூரணன் ஐயா அவர்கள் தமிழக எழுத்தாளர்கள் குழுவின் வழியாகத்தான் எனக்கு அறிமுகமானார். ஆரம்பத்திலேயே என்னுடன் கலகலப்பாகப் பேசிப் பழகிய இவர் என்னுடைய கவிதைகளோ கதைகளோ எதில் பிரசுரமானாலும் உடனடியாக என்னுடைய தனி எண்ணில் பதிவிட்டு வாழ்த்து தெரிவிப்பார்! இந்த உதவியை இவர் என்னுடன் பழக ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை தொடர்கிறார்! இவரை முதல் முதலாகத் தமிழக எழுத்தாளர்கள் குழுவின் 7வது சந்திப்பு திருவண்ணாமலையில் சண்முகம் ஐயா அவர்களின் தலைமையில் நடந்த போது சந்தித்தேன்! நாங்கள் சந்தித்த அந்த முதல் சந்திப்பின் போதே 'நம் உரத்த சிந்தனை' இதழில் பிரசுரமாகியிருந்த என் படைப்புகளைப் புத்தகங்களிலிலிருந்து வெட்டியெடுத்துக் கவரில் வைத்து எடுத்து வந்திருந்தார்! அந்த அன்பை என்றுமே மறக்க முடியாது! அதன் பிறகு அடிக்கடி தொடர்ச்சியாக நாங்கள் பேசிக் கொண்டோம்!



எந்தப் புத்தகத்தில் என் படைப்பு பிரசுரமானாலும் இவரின் வாழ்த்துகள் தான் எனக்கு முதலில் வரும்!

மீண்டும் இரண்டாவது முறையாக மயிலாடுதுறை மாவட்டம் பொறையாரில் நடந்த 9வது சந்திப்பு விழாவின் போதும் ஆவலுடன் நிறைய செய்திகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார்!

பரிபூரணன் ஐயாவின் பாராட்டுகளும் விமர்சனங்களும் யோசனைகளும் வாழ்த்துகளும் என்றும் எனக்கு வேண்டும் என விரும்பி அவரை வணங்குகிறேன்!

ப்ரியங்களுடன்
முத்து ஆனந்த்

# குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்


குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

குடந்தை பரிபூரணன் ஐயாவுடன் ஏற்பட்ட தொடர்பு எனக்கு மகிழ்ச்சி நிறைந்ததும் வியப்பானதுமான ஓர் அனுபவும்.

நான், எனது Phd பட்ட மேற்படிப்பு ஆய்வுக்காக, மலையக மூத்த எழுத்தாளர் "தெளிவத்தை ஜோசப்" ஐயா அவர்களின் சிறுகதைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன்.
இதற்கு முன் இது போன்ற தொரு ஆய்வை வேறு யாரும் செய்திருக்கிறார்களா என்று வலை தளத்தில் தேடிய போது கும்பகோணம் ஆடவர் கல்லூரியில் "பிலோமினா மார்கிரட்" என்ற ஒருமாணவியின் பெயர்காணப்பட்டபோது எனக்கு வியப்பாகவும் சற்று ஏமாற்றமாகவும் இருந்தது. இந்த ஆய்வில் எனக்கு முன்பே ஒருவர் வந்திருக்கின்றாரே என்பதில் ஏற்பட்டதே அந்த சிறு ஏமாற்றம். அவரைப் பற்றி எப்படி அறிந்து கொள்வது என்று தெரியவில்லை. இதற்கிடையில் தெளிவத்தை ஐயாவை ஒருமுறையாவது நேரில் சந்தித்து விட வேண்டும் என்ற ஆவலுடன் காத்திருந்த போதுதான், அவர் திடீரென மறைந்த செய்தி இடிபோல வந்து எங்களைத் தாக்கியது.

அன்னாரின் இரங்கல் கூட்டம் ஒன்று திருச்சியில் நடைபெறுவதாக எனக்கு ஓர் அழைப்பு வந்தது. நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினரும் ஜோசப் ஐயாவின் நெருங்கிய நண்பருமான "திலக்ராஜ்" M.P. அவர்களின் தலைமையில் அந்தக் கூட்டம் நடைபெற்றது. இரங்கல் கூட்டத்திற்கு "குடந்தை பரிபூரணன்" ஐயாவும், அவருடைய புதல்வியாரும் வந்திருப்பதாக தலைவர் அவர்கள் அறிவித்து அவர்கள் இருவரையும்மேடைக்கழைத்தார். இவர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் உடன்பிறந்த சகோதரர், சிறந்த சிறுகதை எழுத்தாளர், என்று அறிமுகஞ் செய்து வைத்தார். அவரது மகள் முதுகலை (M.A) பட்டப் படிப்பிற்காக "தெளிவத்தை ஜோசப் " அவர்களின் சிறுகதைகளை முதன் முதலாக ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளார் என்று சகோதரி பிலோமினாவையும் அறிமுகஞ் செய்து வைத்தார். இதனைக் கேட்ட நான் மிகவும் பரவசமடைந்துபோனேன். என் மனநிலையை விவரிக்க அப்போது வார்த்தைகளே இல்லை என்றே கூறலாம். தெளிவத்தை ஐயாவை சந்திக்க முடியாத மன வேதனையில் இருந்த எனக்கு அவரது சகோதரரை சந்தித்தது சற்று ஆறுதலாகவே இருந்தது. பரிபூரணன ஐயாவை சந்தித்த அனுபவம் இவ்வாறே நிகழ்ந்தது. அதன்பிறகு எங்கள் மூவருக்கும் இடையிலான தொடர்பு இனிமையாகத் தொடர்ந்தது. தெளிவத்தை ஐயா பற்றிய எனது ஆய்வு நூலுக்காக அவரிடமிருந்து நான் கேட்டுத் தெரிந்து கொண்ட செய்திகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.



குடந்தை பரிபூரணன் ஐயா ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர். மரபுக் கவிஞராகவும் அறியப்படுகிறார். ஐயாவினுடைய "ஒரு தாய் மக்கள்" என்ற சிறுகதைத் தொகுதி விரைவில் வெளிவர இருக்கிறது. எடுக்கவோ கோர்க்கவோ என்ற சிறுகதைத் தொகுதி ஒன்று 2024-ல் வெளிவந்திருக்கிறது. தமிழக அரசின் "வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்" என்ற அங்கீகாரம் பெற்றுள்ள குடந்தை பரிபூரணன் ஐயாவை "இன்று"மின்னிதழ் ஊடாக வாழ்த்துவதில் நான் பெருமகிழ்வு கொள்கிறேன். ஐயா அவர்கள். குடும்பத்தாரு டன் நீண்ட காலம் வாழ்ந்து எழுத்துலகில் புகழின் புதிய உச்சத்தை எட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்பு மகள்.

**க. இலக்கியா.**
MA Bed. Mphil. Phd. அயல்நாட்டுக் கல்வித் துறை.
தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம்.

## குடந்தை பரிபூரணன் படைப்பு



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

நெஞ்சைப் பிழியும் நினைவுகள் !

பஞ்சு எண்ணங்கள் நினைவுக் காற்றிலே
பகலும் இரவுமாய் சிதறிப் போயின
கொஞ்ச நாட்களோ நமது காதலும்
குளத்துத் தாமரை வேரெனப் பின்னின
மஞ்சு மேகங்கள் மகுடம் சூடிடும்
மலையின் உச்சியில் பாறைக் கல்லிலே
பஞ்சும் தீயுமாய் அஞ்சி நெருங்கி நாம்
பயின்ற நாட்களும் மறந்து போகுமோ.



பள்ளிச் சென்றிடும் காலை நேரமும்
பகலை வென்றிடும்
மாலை நேரமும்
துள்ளிச் சேர்ந்து நாம்
தொடர்ந்து சென்றதும்
சோலை வனத்திடை சோடி சேர்ந்ததும்
வெள்ளி மாலையை வெறுத்து
ஒதுக்கியும்
விடியும் திங்களை விரும்பி
அழைத்ததும்
பள்ளி நாட்களின் வசந்தத் தோப்பிலே
பச்சை மரத்திலே ஆணியாய் நின்றன.

பாடப் புத்தகம் மார்பைத் தாங்கநீ
பவனி வந்திடும் வீதி சூனியம்
மாடப் புறா வென சேர்ந்து மகிழ்ந்த நம்
வாழ்க்கை ஓடமும் புயலில் மோதிட
வேடர் சிங்களர் கொல்லும் வெறியுடன்
வீட்டை எரித்தனர் வெறியில் ஆடினர்.
பேடை மாண்டதோ
பலியாய்ப் போனதோ
பிரிவுச் சோகமென் நெஞ்சைப் பிழியுதே!

குடந்தை பரிபூரணன்.






## குடந்தை பரிபூரணனுக்கு வாழ்த்துக்கள்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

சிறப்'குடந்தை பரிபூரணன்' என்ற புனைப் பெயரில் பல்வேறு படைப்புகளைப் படைத்துவரும் ச.பாக்கியசாமி, இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர். தஞ்சையில் வசித்து வருகிறார்.

தமிழக எழுத்தாளர்கள் வாட்ஸ்அப் குழுவில் நான் இணைந்த பிறகே இவரைப் பற்றி அறிந்துகொண்டேன்.



சிறுகதைகள் பல இவர் எழுதியிருந்தாலும், மரபுக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர்.

வானதி, இலக்கிய பீடம், பொதிகைச் சாரல் ஆகிய இதழ்கள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றவர்.

2024 ஆம் ஆண்டு சிறுகதை தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்ட இவர், பல இலக்கிய அமைப்புகளிடமிருந்து எண்ணற்ற விருதுகள் பெற்றுள்ளார்.

மார்ச் மாத "இன்று" மின்னிதழைத் தயாரிக்கும் பொறுப்பேற்ற இவர், மேலும் பல நூல்களைப் படைத்து, விருதுகள் வாங்கிக் குவிக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

மிக்க அன்புடன்,

மலர்மதி

---

கார் வாங்கறது மட்டும்தான்
என் ஒரே லட்சியமாக இருந்தது ஆனா
இப்ப....?

என்ன ஆச்சு ?

பெட்ரோல் போடறதுதான் ஒரே
லட்சியமா இருக்கு !



**எம் அசோக்ராஜா**
**அரவக்குறிச்சிப்பட்டி**




அடுத்த இதழ்
சிரிப்பு சிறப்பிதழ்


குடந்தை பரிபூரணன்

## நானும் என் எழுத்தும்

==========

நான் 12ஆம் வகுப்பு படிக்கும் போது என்று எண்ணுகி றேன்,சில வார இதழ்களில் "சிறுவர் உலகம்" பக்கங்களில் பொன்மொழி கள் விடுகதைகள் போன்றவற்றை "தமிழழகன்" என்ற பெயரில் எழுதத் தொடங்கியிருந்தேன். இந்த பெயரை நான் எங்கோ படித்ததில், அந்தப் பெயர் எனக்கு பிடித்து போயிருந்ததது.

பிறருடைய பெயரில் நாம் எழுதலாமா என்பது எல்லாம் அப்போது என் பிஞ்சு உள்ளதுக்குப் புரியாத பெரிய விசயங்கள். வாரம் தோறும் ஏதாவது வந்து கொண்டே இருந்தன.



எப்போதாவது எங்கள் வீட்டுக்கு வந்து போகும் ஓர் எழுத்தாளர். அவர் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இலக்கிய நயமுள்ள, வார மாத இதழ்களைஅள்ளிக்கொண்டு வருவார். கல்கி, கலைமகள், தினமணிக் கதிர், கசடதபற, ஞானரதம், தீபம், அமுதசுரபி போன்றவைகள் அவற்றுள் அடக்கம். அவற்றை நானும் வியப்புடன் புரட்டிப்பார்த்து வாசித்து வியந்ருக்கிறேன். அப்படி ஒருமுறை அவர் வீட்டுக்கு வந்தபோது கல்கியில் ஒரு பக்க அளவில் "தமிழழகன்" என்ற பெயரில் வெளிவந்திருந்த ஒருகவிதையை எடுத்துக் காண்பித்து "நீ எழுதியதா" என்று கேட்டார். இருண்ட வானத்தில் சிலநேரங்களில் எரி நட்சத்திரம் ஒன்று சர் என்று விரைந்து செல்வதைப்போன்றதோர் விவரிக்க முடியாத ஓர் உணர்வு என் உள்ளத்தில் ஏற்பட்டது. நான் அந்தக் கவிதையை எழுதவில்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். நீயும் இப்படி எழுத வேண்டும் என்று அவர் சொல்லாமல் சொல்லியிருக்கிறார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

"தமிழழகன் " என்ற பெயரில் தமிழ்நாட்டில் ஒரு பிரபல கவிஞர் இருக்கிறார் என்பதை பிறகு பிறகு தான் நான் அறிந்து கொண்டேன். என்னை எழுத்துலகிற்குள் இழுத்துச் சென்றது, அன்று அவர் பற்றவைத்த அந்த சிறு தீப் பொறிதான்.

67 வாக்கில் ஓர் எழுத்தாளராக, சிறுகதைக்குள் அடி எடுத்து வைக்கத் தொடங்கினேன்.

## மகளிர் தின சிறப்புக் கவிதை

100/100

பெண்களை அடிமையாக்கும்
பேதமைத்தனத்தை உங்கள்
கண்முன்னே உடைத்தோம்.
நாங்கள் காட்டிய வளர்ச்சி இன்று
விண் பார்க்க உயர்ந்து நிற்க
வியத்தகு பெருமை செய்தோம்
"பெண்தினம்" என்று இந்தப்
பிரபஞ்சம் பேச வைத்தோம்.

பெண் தினம் மட்டும் அன்றி
தினம்தினம் போற்றுகின்ற
எண்ணமே பூத்தால் வாழ்வில்
இன்பமே சிறக்கும் நல்ல
பண்புள்ள சமூக மாற்றம்
படைக்கலாம் உலகை ஆளும்
நுண்கலை வளரும் வெற்றி
நூற்றுக்கு நூறு காணும்...

**********

குடந்தை பரிபூரணன்.

# எழுத்துலகப் பயிற்சி பட்டறை.



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

எங்கள் குடும்பத்தைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது. சகோதரர்கள் ஐந்துபேர்.ஐந்துக்குப் பின்னால வந்த பிள்ளை நான் ஆறாவதா வந்த சின்னப் பிள்ளை.

எங்கள் அம்மாவுக்கு கொஞ்சமாக படிக்கத் தெரியும். அதைவிடக் கொஞ்சமாக எழுதத் தெரியும். அவருடைய ஆறெழுத்துப் பெயரை எழுத அவருக்கு ஐந்து நிமிடமாகும். ஆனால் கேள்வி ஞானம்... வியக்கும் வண்ணம் நிறைய உள்ளவர்! ஔவையார் பாடல்கள், நன்னெறி வெண்பா, இரட்டைப் புலவர் பாடல்கள், காளமேகம் சிலேடை வெண்பா, விவேக சிந்தாமணி, அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து எல்லாவற்றையும் அட்சரம் பிசகாமல் பேச்சுக் கிடையிடையே பழமொழி ...போலக் கூறுவார்கள்.



இந்தப் பாடல்கள் படிக்க எளிதானவை. பேசும் மொழி போன்றவை.
விளங்கிக்கொள்ள மிகவும் இலகுவானவை"ஆடிக் குடத் தடையும் ஆடும்போதே சீறும் மூடித் திறந்தால் முகங் காட்டும்..." பாம்புக்கும் நல்லெண்ணெய்க்கும். காளமேகப் புலவரின் சிலேடை வெண்பா.
"ஆபத்துக் குதவா பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம் தாகத்தை தீர்த்திடா தீர்த்தம் ..." எவ்வளவு இலகுவான விவேக சிந்தாமணி விருத்தம்.
இவைகளைக் கேட்டுக் கேட்டுத்தான் வெண்பா விருத்தம் என்று நெட்டுரு போட்டுக்கொள்வேன் நான். கவிதை எழுத இந்த அனுபவ பாடங்கள் தான் அடி நாதமாக விளங்கின.

அம்மா தானே ஒரு குழந்தையின் முதல் ஆசான்.

அப்பா! திருச்சியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்தவர். வாசிப்பை தேசிக்கும் ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியராக மலை நாட்டுக்கு வந்தார். அந்தக் காலத்திலேயே தமிழகத்திலிருந்து கல்கி கலைமகள் கலைக்கதிர் போன்ற இதழ்களை தருவித்து வாங்கி வாசிப்பார்கள்.

நாங்கள் பாடப் புத்தகம் தவிர்ந்த, இந்தப் புத்தகங்களைத் தொடுவதே இல்லை. தொட்டால் அப்பாவிடம் தொலைந் தோம்.ஆனால் எல்லோருக்குமாக, அதிலுள்ள கதைகளை கவிதைகளை கட்டுரைகளைஇரவு வேளைகளில் சத்தமாக, அபிநயத்தோடு படித்துக் காட்டுவார்கள். நாங்கள் அனைவரும் சம்மணமிட்டு அமர்த்து சமத்தாய் கைகட்டி கேட்டுக் கொண்டிருப்போம். ஜெயகாந்த னின் "சாத்தான் வேதம் ஓதுகிறது" கல்கியின் "பொன்னியின் செல்வன்" ஜெகசிற்பியனின் "ஜீவகீதம்" அநுத்துமாவின் "வேப்பமரத்துப் பங்களா" கல்கியின் "அமரதாரா, " கல்கி இறந்தபின் அவரின் மகள் ஆனந்தி "அமரதாராவை" தொடர்ந்தது, கி.ராஜேந்திரனின் "போர்முனை" இவைகள் எல்லாவற்றையும் வாசிக்க வாசிக்கக் கேட்டுக் கொண்டிருந்தது, என் சுவாசத்தில் ஊறிப் போய் இன்றும் என் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறது.
கலைக்கதிரில் வேழவேந்தன் அவர்களின் விருத்தப் பாடல்களை சொல்லிக்கொண்டே பள்ளிக்குப் போகும் பஸ் பிடிக்க ஓடுவேன்.
"அன்னையே அன்பின் ஊற்றே அழகான மங்கைக்கோலம் தன்னையே தியாகம் செய்து தளர்ச்சியை உடம்பில் ஏற்று என்னை நீ பெற்றாய்" 1957 வாக்கில் கலைக்கதிரில் படித்தவிருத்தம். இவைகளே என்னை படைப்புலகில் பதியம் போட்டு வளர்தவை.

ஒரு பிள்ளைக்கு தந்தையைப் போல வேறு ஒரு வழிகாட்டி இருக்க முடியுமா என்ன.?

என் கவிதைக்கு வழிகாட்டி அம்மா
என் கதைகளுக்கு வழிகாட்டி தந்தை.
எழுத வந்த பின் வழிகாட்டி அண்ணன் தெளிவத்தை ஜோசப்.
நான் வளர்ந்த இந்தச் சூழல்தான் எழுதுவதற்கு எனக்குப் பயிற்சிப் பட்டறையாக விளங்கிற்று என்பேன்.


குடந்தை பரிபூரணன்

## தமயந்தி மனோகரன்.

அதிபர் (ஓய்வு)
விவேகாநந்தா கல்லூரி. கொழும்பு.

திரு.ச.பாக்கியசாமி என்னும் பரிபூரணன் ஈழத்தின் எழில் கொஞ்சும் மலையகத்தில், நல்ல ஆசானாக வாழ்ந்ததை நான் அறிவேன். புனர்வாழ்வில் (RE HABILITATION) புலம்பெயர்ந்து தமிழகம் சென்றாலும் எழுத்துலகை மறக்காமல் "குடந்தை பரிபூரணன்" ஆன சிறந்த படைப்பாளி அவர்.
80,வயதைக் கடந்தாலும் இவரது ஆக்கங்கள் "இன்று"ம் இனமைத் துடிப்புடனேயே வெளிவந்த வண்ணம் இருக்கின்றன! வாழ்த்துகள்.!!


இவரது படைப்புகள் இலக்கியம் சார்ந்தவையாக மட்டுமல்லாது காலத்தை ஒட்டிய சிறுகதைகளாகவிதைகளாக, இருப்பதோடு, அவை வாழ்வியல். போராட்டங்களை மையமாகக் கொண்டவைகளாக அமைந்திருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கது.



மரபுக்கவிதை கள் என்று பார்க்கும்போது கலைஞர், பேரறிஞர், அண்ணா, காமராஜர், காந்திஜி, நேதாஜி, திருப்பூர் குமரன் அப்துல் கலாம் போன்ற பேரறிஞர்கள் பற்றி வெளிவந்திருப்பவை குறிப்பிடத்தகவை.

இவரது படைப்புகள் வெறுமனே காதல்,பொழுதுபோக்கு ஜனரஞ்சகமானவைகளாக இல்லாமல், வாழ்வியல் போராட்டங்கள் சமூக விழிப் புணர்வுகளுடன் கூடிய, முற்போக்கு சிந்தனை, கொண்டவையாக அமைந்திருக்கின்றன.

இவரது படைப்புகளில் "பேரழிவின் ஆரம்பம்" "இதுவும் அந்த இரவிலேதான்" "கண்ணீரே ரத்தமாக" போன்ற சிறுகதைகளும் "சிலப்பதிகாரம், கம்பன் கவிநயம் ஒப்பீட்டாய்வு" மறக்க முடியாத மனிதர்கள் கட்டுரைத் தொடர், "நாலடியாரின் சீரடிகள்" பேச்சுமொழி தரும் "இலக்கியச் சொற்கள்" "கண்ணதாசனின் சமுதாயப் பார்வை" போன்ற வானொலி இலக்கிய உரைகள், பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்று, சாதனை நிலை நாட்டியுள்ளன, என்பது பெருமைக்குரியது, என்று பெருமைப் படுகின்றேன். கடல் கடந்து சென்றாலும் என் பார்வைக்கும் கவனத்துக்கும் வரும் சில படைப்புகள் வாயிலாக, அவர் மிகவும் அண்மையில் இருப்பதைப் போன்ற உணர்வே ஏற்படுகிது. தமிழன்னை தந்த கவித்துவத் தமிழ் மொழியோடு இலக்கியத்தை யும் வளமாக்க அவர் இன்னும் பல்லாண்டு காலம் படைப்புகளை வழங்க வேண்டும் என்று, "இன்று" மின்னிதழ் வாயிலாக வாழ்த்துகிறேன். நன்றி. வணக்கம்.





குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## காலம்

மனிதா நீ உறங்கினாலும்
காலம் உறங்காது
கவனம்

நீ சோர்ந்தாலும்
காலம் சோர்ந்து விடாது
கவனம்



நீ மூப்பால் உதிர்ந்தாலும்
காலம் உதிரவே உதிராது
கவனம்

இமைப் பொழுதில்
உன்னைக் கடக்கும்
காலத்தை கைது செய்ய
கற்றுக்கொள்

நீ காலம் கடந்தும்
வாழலாம்
இந்த உலகில்.

**ஏ. மூர்த்தி**
புல்லரம்பாக்கம் அஞ்சல்
கைப்பேசி –9600886441.



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

# இன்முகத்தான் சிந்தனை

சமிபத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த திரு.எலான் மஸ்க் லட்சக்கணக்கான செயற்கை கோள்களை விண்ணில் நிலை நிறுத்தப்பபோகவதாகவும், அதன் மூலமாக சில ஆராய்ச்சிகள் செய்ய இருப்பதாகவும் செய்தி வெளியானது. அந்த ஆராய்ச்சி தொடர்பான விசயங்களை பின்னர் பார்ப்போம்.... இப்போது சிலர் ஆகாயத்தில் குப்பைகள் சேர்கிறது என்றனர். தற்போதே குப்பையாகத்தான் உள்ளது.

ஒரு காலத்தில் பால் வாங்க சொம்பு, கூஜா எடுத்துக்கொண்டு போனோம்... உணவு பார்சலுக்கு பாத்திரம் எடுத்துக்கொண்டு போன காலம் போய் இன்று வீசிய கை வெறும் கையாகப் போய் கேரி பேக் மற்றும் பிளாஸ்டிக் பைகளில் வாங்கி வருகிறோம். சின்ன தைலம் டப்பா கூட பிளாஸ்டிக் பையில் அடைத்துத்தான் விற்கிறார்கள். 90 காலங்களில் வெண்ணெய் பேப்பரில் தான் கட்டிக் கொடுப்பார்கள். சில இடங்களில் வாழை இலையில் கட்டிக் கொடுப்பார்கள். இன்று எல்லாமே பிளாஸ்டிக் டப்பா.



தினசரி நம் வாழ்வில் பயன்படுத்தும் பல பொருட்களோடு பிளாஸ்டிக்கும் சேர்ந்து வருகிறது. அதை தடுக்கவே முடியவில்லை.

நாம் குடிக்கும் நீரிலேயே மைக்ரோ பிளாஸ்டிக் கலந்துள்ளதாக சில செய்திகள் சொல்கின்றன. இன்னும் இரத்தத்தில் கலந்துள்ளதாகவும் சில செய்திகள் சொல்கின்றன...

ஆனால் நாம் யாரும் இதற்கெல்லாம் பயப்படுவது மாதிரி தெரியவில்லை. எது நடந்தால் என்ன? பார்த்துக்கொள்வோம் என்று மனித சமூகம் கடந்து கொண்டுதான் உள்ளது

இதற்கெல்லாம் இயற்கை என்ன தீர்வு (தண்டனை) வைத்துள்ளதோ... இயற்கைக்கே வெளிச்சம்

**இன்முகத்தான்**

கசடறக் கற்று
கை தேர்ந்து
அன்புடன் பண்பையும்
கற்றதையும் பெற்றதையும்
உள்ளன்புடன்
உவந்தளிக்கும்
உன்னதப் பணி ஆற்றும் ஆசிரியப்
பெருந்தகைகளைப்
போற்றிப் பணிவோம்



பி.ஆர்.கிரிஜா



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

பிள்ளைகள் ஏறி குதித்து
விளையாடிய மெத்தை...

இன்று அவள் துயில் கொள்ளும் மேடை!

தூக்கத்தில் இதழ் ஓரம்
எச்சில் ஒழுக,

அவள் மெய்மறந்து
உறங்குகிறாள்...

ஊர்ந்து செல்லும் நத்தை,
பாதை எங்கும் ஜரிகை
இழைப்பது போல,
அந்த எச்சில் துளிகள்
மெத்தையில்
கோலமிடுகின்றன!

அவளின் மென்பஞ்சு
தேகத்தைச் சுமந்தபடி,
அந்த மெத்தையும் கொஞ்சம்
இளைப்பாறட்டும்!

இரா. ரமேஷ்பாபு




மின்னல் கதை
...
தானம்

சோகத்திலும்.. குடும்ப உறுப்பினர் சம்மதத்தோடு உடல் உறுப்பு தானம் செய்தார் மகனின் இறப்பு மூலமாக.



விலை எழுதிட
...
தன்னை போல் அதிகம் படிக்காத காரணத்தால்.. மகனுக்கு சிலேட் வாங்கி தந்தார்.. காய்கறி கடைவைக்க.

அதிகம் பேசு
...
புதுமனைவி கவிதாவிடம்.. நான் என் உறவுகளிடம் அதிகமா பேசமாட்டேன். நீயாவது..பேசு என்று கூறினான் உறவுகள் வலுபெற.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்



குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## காதல்

காதலித்தவனை
பெற்றோர்களின் நிர்பந்தத்தால்
கைவிட்டுவிட்டு...
பெற்றோர்களின் ஏற்பாட்டின் படி
மணம் முடிக்கும்
பெண்கள் பெரும்பாலும் அரை
மனதோடு தான் வாழ்க்கையை
கடத்துகிறார்கள் !
திருப்தியோடு வாழ்வது தன்
வைராக்கியத்தை தீர்த்த பெற்றவர்கள்
மட்டுமே !




எம்.பி.தினேஷ்.
கோவை – 25




## சிரிப்பு

தலைவர் : தேர்தல் அறிக்கையில் வீட்டுக்கு ஒரு கார் தருவோம்ன்னு நாம் கூறியிருப்பது சாத்தியப்படுமா?
செயலாளர் : வெற்றி பெற்றதும் வீட்டுக்கு ஒரு பொம்மை கார் கொடுத்து சமாளிச்சுக்கலாம்.

அரசர் : புறமுதுகிட்டு ஓடிய எதிரி நாட்டு மன்னனை ஏன் பிடித்து வரவில்லை?
தளபதி : அவர் ஓடவில்லை மன்னா! காலில் சக்கரத்தை மாட்டிக்கொண்டு படுவேகத்தில் ஸ்கேட்டிங் செய்து சென்று விட்டார்.



நாஞ்சில் சு. நாகராஜன்
பறக்கை.
செல். 9486387026




புதுச்சேரி படைப்பாளர் சங்கம் நடத்திய மூத்தோர் சொல் கேள் என்ற கவிதைக்கு இன்று எழுத்தாளர் திருமதி.பா.கலைமகள் இரண்டாம் பரிசு பெற்ற தருணம்.

# மினி கீதை


குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

## இலவசம்!

தங்கை வீட்டுக்குப் போக பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தாள் வைதேகி. அப்போதுதான் அவள் நினைவுக்கு வந்தது, பர்ஸை வீட்டிலேயே மறந்துவிட்டு வந்தது. டிக்கெட் எடுக்க காசு இல்லையே என்ன செய்வது? என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே வந்து நின்றது, மகளிருக்கான இலவசப் பயணப் பேருந்து!



மலர்மதி
✆ 8667417874




## வருவாயா

**********

நீண்டகாலமாய்
பூட்டிக் கிடக்கும் வீடாய்
என் மனது

ஓட்டுடைத்து
கொள்ளையடிக்க வருவாயா

ஓட்டடையடித்து
வெள்ளையடிக்க வருவாயா.

_ ஆதி. சௌந்தரராஜன்.
பட்டவர்த்தி
தருமபுரி மாவட்டம்
✆ 8637687802

## மகளிரைப் போற்றுவோம்

அவனன்றி மட்டுமல்ல
அவளின்றியும் அசைவதில்லை
புவனத்தில் பெண்ணின்றி
எதுவுமே நிலையில்லை
குடும்பம் என்னும் பெருந்தேரின் அச்சாணி
அடுப்பினில் அறுசுவை சமைத்திடும்
மகாராணி
தங்கம் வெல்லும் திறமையும் படைத்தவள்
எங்கும் எதிலும் வரும்தடை உடைப்பவள்
புலியினை முறத்தால் கொன்றவள்
தமிழச்சி
கிலியின்றி அரசாட்சி அமைத்தவர்
வேலுநாச்சி
விடுதலைப் போரினில் வீறுகொண்ட
ஜான்சிராணி
கெடுகவுன் ஆயுளென்ற கற்பரசி
கண்ணகி
வெள்ளையனை மிரட்டிய வள்ளியம்மை
தில்லையாடி
தெள்ளுதமிழ் அவ்வை தந்தாள்
ஆத்திசூடி
உடையாளும் குயிலியும் வீரத்தின்
அடையாளம்
தடையில்லை
பெண்மையும்
ஆண்மைக்கு நிகராகும்
இந்தியாவில்
இயற்கையும்
இறைவியும்
பெண்ணென்பர்
வந்தனை செய்வோம்
மாதரெனும்
மகாசக்தியை



வீரன்வயல் வீ.உதயக்குமாரன்
திருவாரூர் மாவட்டம்

ரோஜா பூக்களின்
அத்தனை இதழ்களும்
தித்திப்பு,தான்
ஆனால்!
அன்பே உனது
இரு
இதழ்கள்
குல்கந்து
சுவைதான்



---

கூந்தல்
ஊஞ்சலில்
மலர்ச்சரம் ஆடிட
செவி மடல்களில்
ஜிமிக்கி
கதகளி,நடனமாட
இதழ்களின் மேடையில்
நமது, காதல் நாடகம்
அரங்கேற்றம்
எப்பொழுது ஏந்திழையே

கே.அசோகன்
சென்னை




எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் கேள்வி பதில் பகுதியில் அயன்புரம் திரு.த.சத்தியநாராயணன் அவர்களிடம் வாசகர்கள் கேட்ட கேள்வியும் பதிலும்...


குடந்தை பரிபூரணன்
சிறப்பிதழ்

கேள்வி–தங்களது முதல் படைப்பு எந்த ஆண்டில், எந்த இதழில்/ பத்திரிகையில் வந்தது? அந்தக் கட்டிங் இருந்தால் பதிவிடுங்களேன்.
–எஸ்.வைத்தியநாதன்

பதில்–1976 ஆம் ஆண்டு தினகரன் நாளிதழில் நடிகர் திலகம் பதில்கள்

நீங்கள் சந்தித்து உரையாடிய முதல் திரைப்பிரபலம் யார்? அந்த அனுபவம்?
–எஸ்.வைத்தியநாதன்

பதில்–நடிகர் தியாகராஜன் அவரிடம் பணி புரிந்தும் இருக்கிறேன்

அரசு பதில்கள், துக்ளக் பதில்கள், கழுகார் பதில்கள் யாருக்கு கேள்வி கேட்பது கடினம்...?
–கோ.மூர்த்தி, முசிறி.

பதில்–மூவரிடம் இருந்து பதில்கள் வாங்குவது தான் கடினம் நிறைய கேள்விகள் கேட்டால்தான் ஓரிரு பதில்கள் வரும்

சமூக வலைதளங்களில் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளீர்கள்?
–நம்.திரு.ரஅம்ஏச், அரியலூர்.

பதில்–புத்தகம் படிக்கும் நேரம் போகத்தான் மற்ற பணிகளுக்கு நேரம்

சினிமா, தொலைக்காட்சி, இப்போதைக்கு எது கெத்து?
– சாத்துக்கூடல் கா.இளையராஜா

பதில்– வீட்டில் தொலைக்காட்சி தியேட்டரில் சினிமா கெத்து

எந்த அச்சு பத்திரிகை நின்று போனது தங்களை மிகவும் பாதித்தது?
–கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி – 1

பதில்– கல்கி பத்திரிகை நின்று போனதில் மிகவும் வருத்தம்

பத்திரிகைகளில் நம் படைப்புகள் இடம்பெற தாங்கள் கூறும் ஆலோசனை என்ன? –
– கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி – 1

பதில்–பத்திரிகையில் நம் படைப்பு இடம் பெற தொடர்ந்து எழுதிக்கொண்டே இருக்க வேண்டும் அது இடம் பெறும் வரை.

ஒரு படைப்பை வாசகன் படிப்பதற்கும்... பிறர் படைப்பை படைப்பாளி படிப்பதற்கும் என்ன வித்தியாசம்ங்க ?
–ஆறுமுகம் நாகப்பன்

பதில் –எழுதுகிற எல்லோரும் தங்கள் படைப்பு களை படிக்கும்போது பெற்ற தாய் குழந்தையை பார்ப்பது போன்ற சந்தோஷத்தையே அடைவார்கள்


அடுத்த இதழ்
சிரிப்பு சிறப்பிதழ்

தங்களுக்கு யாராவது 'கேள்வியின் நாயகன்' என்ற பட்டத்தைக் கொடுத்திருக்கிறார்களா சார்?
–ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

பதில்– நீங்க கொடுத்திடுங்க

'எழுதும் பழக்கம்' உங்களுக்கு இல்லாமல் இருந்திருந்தால் ?
–ஆ மாடக்கண்ணு
சொந்த ஊரு
பதில்– எழுதலாம் வாங்க குழுவில் இடம் பிடித்து இருக்க முடியாது

பத்திரிகை தர்மம் என்பது எது?
–கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி – 1

பதில்–பத்திரிகை தர்மம் என்பது
உழைப்பாளிகளுக்கு சம்பளம்
கொடுப்பது போல்
படைப்பாளிகளுக்கு அதற்குரிய
சன்மானம் வழங்குவது தான்
நல்ல பத்திரிகை தர்மம் என்பது
எனது கருத்து

இதை எல்லாம் ஏன்
எழுதிக்கொண்டு இருக்கிறோம்
என்று எப்பொழுதாவது
நினைத்ததுண்டா?.
–ரவி அல்லது.

பதில்– நினைப்பேன் ஆனால்
என் படைப்பு வந்ததும் எழுதும்
ஆர்வம் வந்து விடும்

தாங்கள் பதில் சொல்வதற்கு
சிரமப்பட்ட கேள்வி !
–ஆறுமுகம் நாகப்பன்

பதில்– இந்த கேள்வி தான்

ஒரு கேள்விக்கு இரு பதில்கள்
தோன்றினால் ?
–ஆறுமுகம் நாகப்பன்

பதில்– ஒரே காம்பில் சில சமயம்
இரண்டு வாழை பழம்இருந்தால்
அதை சுவைப்பது போல் இதையும்
ரசிக்க வேண்டும்

"அஞ்சல் அட்டையா மின்னஞ்சலா"?
குழுவில் அடிக்கடி உலா வரும்
கேள்விதான் இது.
–குடந்தை பரிபூரணன்

பதில்– அஞ்சல் அட்டை
இருக்கையில் மின் அஞ்சலுக்கு
அஞ்சேல்

எழுத்துலகில் தாங்கள் பெற்ற உயர்ந்த
விருதாக எதை நினைக்கிறீர்கள் சார்?
–நம் திரு.ரஅம்ஏச். அரியலூர்

பதில்– அந்நியன் படத்தில்
பெயர் வந்ததை

கேள்வி பதில் தாண்டி இலக்கியத்தில்
ஆர்வமான பகுதி எது?
–சுந்தரமூர்த்தி

பதில்– சிறு கதைகள்தான்

நிருபர்கள் கேட்கும் கேள்விகளுக்கும்
நீங்கள் பத்திரிகையில் கேட்கும்
கேள்விகளுக்கும் என்ன ஒற்றுமை
இருக்கிறது?
–குமரப்பன்

பதில்– நிருபர்கள் கேள்விகளுக்கு
அப்போதே பதில் கிடையாது விடும்
நான் பத்திரிகை வரும் வரை
காத்திருப்பேன்

அந்நியன் படத்தில் உங்கள் பெயரை
பயன் படுத்த கேட்கப்பட்டதா...
சன்மானம் தரப்பட்டதா...?
– கோ.மூர்த்தி, முசிறி.

பதில்–கேட்கவில்லை
நானும் சன்மானம் கேட்கவில்லை

எழுத்தறிவென்னும் ஊற்று தொடர
வேண்டும் என்பதற்காக பல்வேறு
படைப்புகள் மத்தியில் நம்மை
எழுத்தாளனாக அறிமுகப்படுத்திய
விமர்சன கடிதங்களை அவ்வப்போது
எழுதி இதழ்களில் வெளியானால்
போயும் போயும் இதையும்
எழுதுகிறாயே என்று சில
எழுத்தாளர்கள் ஏளனமாக
கேட்கிறார்களே. அவர்களுக்கு பதில்
எப்படி கொடுப்பது நாராயணன் சார்.?
–ஏ.ஜி.முகம்மது தௌபீக்
மேலப்பாளையம்

பதில்– இவர்களுக்கெல்லாம் பதில்
சொல்லி என்ன லாபம்?
மௌனம் தான் i இவர்களுக்கு
சிறந்த பதில்

அடுத்த இதழ்
சிரிப்பு சிறப்பிதழ்

5. 5வது கேள்வி... இந்த குழுவில்
யாரும் கேட்காத கேள்வியை நீங்களே
கேட்டு , அதற்கு நீங்களே பதில்
சொல்லுங்களேன்?!
–ஆ மாடக்கண்ணு சொந்த ஊரு

பதில்– பதில்
இந்த கேள்வியை தான் சொல்லலாம்




கேள்விகள் கேட்பதில் கின்னஸ் சாதனை படைக்கும் எண்ணம் உண்டா சார்?
–ராம்ஆதிநாராயணன், தஞ்சாவூர்

பதில்– உண்டு ஆனால் கின்னஸ் சாதனை கிடைக்குமா?

வார மாத இதழ்களில் வரும் கேள்வி பதில்கள், வாசகர் கடிதங்கள் ஒரு படைப்பாளருக்கு நிலைத்த பெருமையை தருமா?
–ச.கோபிநாத், சேலம்

பதில்– படைப்பாளிகள் என்ற பெயர் பெற்றிருப்பதே புகழின் அடையாளம் தானே

அச்சு இதழ்களின் எதிர்காலம் கேள்விக்குறியா? ஆச்சரியக்குறியா?
–ச.கோபிநாத், சேலம்

பதில்– அச்சு இதழ்களின் எதிர்காலம் எப்படியிருக்குமோ சொல்ல முடியாது ஆனால் அச்சு இதழ்களின் காலம் பொற்காலம் என்று எதிர்காலத்தில் பேசப்படும்

வாசகர் கடிதம் எழுதும் ஆவல் எப்படி உருவானது..?
–மு.குமரன், பண்ணந்தூர்.


பதில்–வாசகர் கடிதம் எழுதிய பிற வாசகர்களை பார்த்து தான் எனக்கும் எழுதும் ஆர்வம் வந்தது

சத்திய நாராயணன் என பெயர் கொண்ட தாங்கள் எப்போதாவது 'சத்தியம்' தவறி நடந்தது உண்டா?
–கல்லுரி ராமன்

பதில்– சில சமயம் ஆபத்துக்கு பொய் சொன்னதுண்டு

ரஜினி50, இளையராஜா50 மற்றும் சத்யநாராயணன்50 – மூன்றையும் பற்றி மூன்று வார்த்தைகளில் (முடியாவிட்டால் மூன்று வாக்கியங்களில்) சொல்லுங்கள்?
–இரா.தீனதயாளன், இருவேல்பட்டு.

பதில்– ரஜினி, இளையராஜா இவர்கள் இருவரும் இமயம் நான் அவர்களை அண்ணாந்து பார்க்கின்ற ரசிகன்




கதைகளில் கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

